"மாறன்" தமிழ்நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு நே. 7.

உ

கணபதி துணை.

மகாகவியாகிய கம்பர்

அக்னிவம்ச க்ஷத்திரிய மகாராஜர்களாகிய

வன்னிய பூபதிகள்பேரிற் பாடிய

செம்பொற்சிலை யெழுபது.

இது

தமிழ்ப் பண்டிதர்

பு. அ. கோவிந்தராஜ நாயகர் அவர்களால்

பார்வையிடப்பெற்று,

சென்னைப் புரசை,

"மாறன்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1928. [அணா 2

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ் 200 பாடல்கள்.

இத்திருப்புகழ் பலவாறு சிதைவுற்றிருப்பதை ஒருவாறு திருத்தியும், சந்தங்களையும், துள்ளல்களையும் சரிவர திருத்தி, ஆறுபடைவீடுகளையும் வரிசைப்படுத்தி, அருணகிரிநாத சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், திருவுருவப் படமும் சேர்த்து வெகு அழகாக அச்சிட்டிருக்கிறது.

இதன் விலை அணா-6 ஷை 160-பாட்டு விலை அணா-5

நவதேவர் கீர்த்தனை.

இதில் விநாயகர், சிவன், விஷ்ணு, சுப்பிரமணியர், சரசுவதி, தேவி, தாசரதி, மாருதி, தர்மசாஸ்தா முதலிய கடவுளின்மீது கூறப்பட்டிருப்பதால், கீர்த்தனை படிப்போருக்கும் நாடகம் நடிக்கும் நடிகர்களுக்கும் சங்கீதம் பயில்வோருக்கும் ஓய்வு நேரங்களில் பாடல் பாடவேண்டுமென்ற ஆவலுடையவர்களுக்கும் இக்கீர்த்தனை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பெருமை வாசிப்போருக்கே தெரியவரும்.

இதன் விலை அணா—5

ஈட்டி யெழுபது

மூலமும் - உரையும்.

மகாகவியாகிய ஒட்டக்கூத்தர் செங்குந்தத் தலைவர்கள் மீது பாடிய இவ்வீட்டியெழுபதை முன்னிருந்த பிரதிகளைவிட ஒருவாறு திருத்தியும், சில குறிப்புகளை எழுதியும் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6.

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,

புரசை, சென்னை.

"மாறன்" தமிழ்நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு நே-7.

உ

கடவுள் துணை.

மகாகவியாகிய கம்பர்
அக்னிவம்ச க்ஷத்திரிய மகாராஜர்களாகிய
வன்னிய பூபதிகள்பேரிற் பாடிய

செம்பொற்சிலை யெழுபது.

இது
தமிழ்ப் பண்டிதர்
. அ. கோவிந்தராஜ நாயகர் அவர்களாற்
பார்வையிடப்பெற்று,

சென்னைப் புரசை,
"மாறன்" அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1928.

வண்ணத் திரட்டு

இதில் பல வித்துவான்களால் இயற்றப்பட்ட வண்ணங்களும், தண்டபாணி சுவாமிகள் என்னும் (புலவர் புராணம் பாடிய) முருகதாசர் இயற்றிய வண்ணமும், சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் இயற்றிய வண்ணமும், வசனநடையில் எழுதிய வண்ணப்பாவின் இலக்கணமும் சேர்க்கப்பட்டிருப்பதோடு வண்ணப்பாவின் இலக்கணத்தை கூறும் பண்டைய சூத்திரமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா—8.

திவ்வியகவி பிள்ளைப் பெருமாளையங்கார்

அருளிச்செய்த

அஷ்டபிரபந்தம்

இதற்குச் சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் மாணவர் பு. அ. கோவிந்தராஜ நாயகர் இயற்றிய துறைவிளக்கமும், அரும்பத உரையும், இந்நூலாசிரியர் இயற்றிய திருநறையூர்நம்பி மேகவிடுதூதும், திருத்தலமகிமையும், திருத்தலங்களுக்கு திருநாமம் வந்த காரணமும், புதிதாக எழுதப்பட்டிருக்கின்றன. விலை ரூ—1

பல வித்துவான்கள் பாடிய

சீட்டுக்கவித் திரட்டு.

விலை அணா—3

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,

புரசை, சென்னை.

உ

கடவுள் துணை.

செம்பொற்சிலை யெழுபது.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

கொச்சகம்.

திருவளரும் வன்னியர்செஞ் சிலையெழுப திணைவிளம்ப
மருவளர்பைங் கடுக்கையும்வெண் மதியுமிலங் தோன்வாமத்
துருவளரும் வரைமடந்தை யுவந்தளிப்பத் தோன்றிவரம்
தருவளஞ்செய் விகடசக்ரத் தந்திமுகன் றுடொழுவாம். 1

நூற்பெயரும், ஆக்கியோன் பெயரும்.

அறுசீர்க்கழி நெடிலாசிய விருத்தம்.

முந்தைநாள் வீர சம்பு முனிசெய்மா மகத்திற் போந்த
சந்ததி யார்சீ ரோது கெனத்தகு முதியோர் கேட்ப
இந்தணி சடிலத் தெம்மா னிணைக்கழல் பராஅயி சைத்தான்
செந்தமிழ்க் கம்பன் செம்பொற் சிலையெழு பதுவா மிந்நூல்.

கச்சித்தலத்தின் சிறப்பு.

வேறு.

மெச்சுந் தரங்கக் கடலுலகின் மிளிருந் தலங்கண் மிகவெனினும்
இச்சித்தவர் தங் குறைவெயின்மு னிமம்போற் கடிதகற்கியலாவே
பச்சை வண்ணத் திருமாலும் பவள வண்ணச் சோதியும்வாழ்
கச்சித் தலத்தைப் புரையுமெனக் கழறத் தலங்கள் காணேமால்.

கோத்திரச் சிறப்பு.

வேறு.

சாத்திர மறைகள் சொற்ற தனிநிய மம்வா ழாதோர்
சூத்திரந் தவறில் வன்னி தோன்றுமெய்ப் புகழ்காப் பாளர்
மாத்திரை யளவு ஞான மறைப்பின்மா தவங்கூர் சம்பு
கோத்திர வரசர்க் கொப்புக் கூறுவ தெவரை மாதோ. 4

உற்பவச் சிறப்பு.

கொச்சகம்.

திங்கண்முடிம் மழைபிலிற்றச் செழித்துயிர்க ணனிமல்க
அங்கமோ ராறுமறை யந்தணரா குதியோங்கத்
துங்கமனு நெறிதழைப்பத் துகளறுவன் னியினின்றும்
பங்கயனு முதலிவரைப் படைத்துலகு படைத்தானால். 5

குலச் சிறப்பு.

விதிகுலத்தோர் சிறப்புறச்செய் வேள்விக்குச் சிறந்தவன்னி
உதிகுலத்தோ ராதலினு லுயர்குலத்தோ ராமிவர்க்கத்
துதிகுலத்தோ ரொவ்வாரேற் சொலும்வணிக குலத்தோரும்
நதிகுலத்தோர் களுமெங்ங னுட்டினிலொப் பாவாரே. 6

இதுவுமது.

மறைக்குலத்தி லுதித்தாலென் மறையுணர்ந்தா லென்வணிகர்
நிறைக்குலத்தி லுதித்தாலென் னிதிபடைத்தா லென்னுன்காம்
முறைக்குலத்தி லுதித்தாலென் முயற்சிசெய்தா லென்வன்னி
இறைக்குலத்தில்* உதித்தவரே யிகபரனென் றியம்புவரே. 7

படைத்துணைத்தலைவர் குலச்சிறப்பு.

விடையுடையார் வரமுடையார் வேந்தர்கோ வெனவுடையார்
நடையுடையார் மிடியுடைய நாவலர்மாட் டருள்கொடையார்
குடையுடையார் மலையமன்னர் குன்றவர்பல் லவர்மும்முப்
படையுடையார் வனியர்பிற ரென்னுடையார் பகரீரே. 8

பாயிர முற்றிற்று.

---

* உதித்தவரே யிகபரன் என்பது பால்வழுவமைதி.

நூல்.

விசயதசமிநாட் கோடற்சிறப்பு.

கொச்சகம்.

சொன்மங்க லம்பொருந்துந் தொல்லுலகிற் பல்லுயிரும்
நன்மங்க லம்பொருந்து நான்மறையு நனிவிளங்கும்
வன்மங்க லம்பொருந்தி வளர்வணிப குலவரசர்
வின்மங்க லம்பொருந்தும் விறற்றசமி நாட்கொளினே. 1

விற் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கலையாய் வன்னி குலோத்துங்கர்
கரத்திற் கவின்கொண் டமைந்தவென்றிச்
சிலையா லன்றோ வேழ்புயலுஞ்
சேணிற் பொலியுந் திவாகரனும்
அலையார் கடலுங் கடையனலு
மடன்மா ருதமு மடங்கியொரு
நிலையாய் நின்ற மனுநீதி
நெறியு நின்ற தறியீரோ. 2

இதுவுமது.

வேறு.

மலையினிற் பொலங்கொண் மேரு
மலையன்றி மலைமற் றுண்டோ
கலையினி லுரைப்ப வெண்ணெண்
கலையன்றிக் கலைமற் றுண்டோ
அலையினி லுகாந்த நீத்தத்
தலையன்றி யலைமற் றுண்டோ
சிலையினிற் றிறங்கூர் வன்யர்
சிலையன்றிச் சிலைமற் றுண்டோ. 3

இதுவுமது.

வேறு.

அமரரொரு புறமரிய முனிவரொரு புறம்விசயை
யரிவையொரு புறமடலுறும்

சமனுமொரு புறம்விரவு கழுகுமொரு புறநெடிய
தருமமொரு புறமுடைகொள்வாய்
ஞமலியொரு புறமெரிக ணலகையொரு புறமிடர்செய்
நரிகளொரு புறமகிழவெஞ்
சமர்செய்திடு மணிமவுலி யணிவணிய குலவரசர்
தமதுகர மருவுசிலேயே. 4

இதுவுமது.

வேறு.

முட்டரை யறிஞ ராக்கு முனிவரைத் தவஞ்சேர்ப் பிக்கும்
சிட்டருக் கரசு நல்குஞ் சேர்ந்தவர்க் குரம்பா லிக்கும்
மட்டறு தெவ்வர் தம்மை வலிதப வச்சு றுத்தும்
துட்டரைத் தொலைப்ப வன்னி தோன்றுபொற் சிலேயொன் [றம்மா.

விற்பிடிச் சிறப்பு.

கொச்சகம்.

மிடிகரக்கப் புலவருக்கு மிகுபொருளீந் திடுவார்தம்
அடியிரக்கத் தொடுபணிவார்க் கரசுதருங் கொடையாளர்
படிபுரக்க வவதரித்த பண்ணுடர் கரத்தமைவிற்
பிடியுரத்தி னலன்றே பெருஞால முரமுறலே. 6

இதுவுமது.

மைப்படியு முடலவுணர் வருக்கமாய் வுற்றதுவும்
இப்படியோ டனைத்துலகு மிணையினலம் பெற்றதுவும்
செப்படியுஞ் சுசியுதித்தோர் நீள்பகழி தொடுசிலேயின்
கைப்பிடியாண் மையினல்லாற் கடைப்பிடியே தியம்பீரே. 7

வின்மணிச் சிறப்பு.

பணியிறைக்கங் கணனடியைப் பழிச்சுநர்வா தாபிமுடி
துணியிறைவர் பண்ணுடர் சோதிமணி முடிவணியர்
அணியிறையேந் தியவயிர மாஞ்சிலேயி லடருநவ
மணியிரையக் களகளென வயிறிரையு மாற்றலர்க்கே. 8

நாணியின் சிறப்பு.

கன்னுணும் புயமுடையார் கடனுணு மருளுடையார்
மன்னுண்மைப் பொலிவுடையார் மணிமுடிவன் னியர்தாங்கும்
வின்னுணின் வலியாலே வியனிலம்வாழ் வதுமடையார்
தங்காண மிழந்துவலி தாழ்ந்துகரங் குவிப்பதுமே. 9

வில்லேந்துதற் சிறப்பு.

கொச்சகம்.

உலகறிமும் முரசொலிப்ப வுலைவில்கலி வெருண்டொளிப்ப
நிலவெனவெண் குடைகவிப்ப நிகழ்பவம்பின் புறந்தவிப்ப
இலகுபுலிக் கொடிதழைப்ப விருங்குடிகள் விருந்தழைப்ப
அலகிலவா வியற்றும்வன்ய ரணிசிலையேந் துவதம்மா. 10

இதுவுமது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அலையை யெடுக்கா விடிற்பரவைக்
காற்ற லேதவ் வரவரசன்
தலையை யெடுக்கா விடிற்பொலிவு
தரணிக் கேது விதுவளரும்
கலையை யெடுக்கா விடிற்காட்சி
கங்குற் கேது வன்னியர்செஞ்
சிலையை யெடுக்கா விடிலுயிர்க்குச்
செழிப்பங் கேது செப்பிடினே. 11

இதுவுமது.

வேறு.

வட்டவுல கிற்கொடிய நெட்டவுண ரைச்சமரின்
மட்டறவி டித்தெதிரொபிற்
கிட்டவறு பட்டதலை நட்டுவிழ மொட்டையுடல்
கெட்டுருட ரக்குருதிநீர்
கொட்டநுரை கட்டிடமி கச்சுழிசு ழித்தலைகொ
ழித்துநதி யிற்புகவழி
விட்டுறமி நெட்டையிடு மக்கினிகு லத்தரச
விக்ரம ரெடுத்தசிலையே. 12

இதுவுமது.

வேறு.

குடைகொண் டெழுந்தான் மாயனெடுங்
குன்றந் தனையான் குலங்களிக்கப்
புடைகொண் டெழுந்து பொழிந்தபெரும்
புயல்க ளிரிந்த வன்னியர்விற்
படைகொண் டெழுந்தார் புவிசெழிக்கப்
பதறி யவுணர் தெனபதிக்கே
விடைகொண் டெழுந்தே யொருநாளு
மீளா வகைசென் றடைந்தனரே. 13

வில்வளைத்தற் சிறப்பு.

கொச்சகம்.

தனுவணங்கொண் டுலகளிப்பத் தார்வேந்த ரெனவுதித்தோர்
தனுவணங்க சனும்வெள்கித் தாள்வணங்கு மெழின்மிக்கோர்
தனுவணங்க கலவெவர்க்குந் தாய்போனன் றுற்றும்வன்யர்
தனுவணங்கத் தரியலர்க டஞ்சமென வணங்காரோ. 14

நாணேற்றுதற் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஓங்குபுகழ் வன்னிமன்ன ரொன்னலார் தமைப்புறங்கண்
டுலகங் காக்கத்
தாங்குவரிச் சிலைவணங்கிச் சரோருகக்கை யாற்றீண்டித்
தனிநாண் பூட்டப்
பாங்குறுமூ வுலகினரும் பைங்கழைத்தோண் மடநல்லார்
பசும்பொன் வண்ணப்
பூங்கழுகின் மங்கலநாண் பூட்டுதல்போன் மெய்புளகம்
போர்ப்பர் மன்னோ. 15

குணத்தோனிச் சிறப்பு.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நெடியதிரை யெழுகடலி னொலியுமழை முகிலொலியு
நிகழூழ்யுக முடிவின் முடுகும்

ஓடிவில்பெரு வளியொலியு முருமொலியு மிணையிலென
　　வுரகர்விழி பிதிர வெருவிக்
கொடியதிது கொடியதென விபுதர்நிலை கெடவவுணர்
　　குடர்குலைய வடர் திசையுடன்
படியதிர வனியர்சிலை தழுவுகுண வொலியினிலை
　　பகர்வதெவ னரித ரிதரோ. 16

அம்பறுத்தூணிச் சிறப்பு.

கொச்சகம்.

உம்பர்யா மென்றிறுமாந் துறைவதுண்டவ் வமரர்கள்யாம்
கம்பரா மென்றேத்தக் கவியரசாய் வாழ்வதுமுண்
டிம்பராருஞ் சொல்வன்னிய ரேலாருக் கிடரிழைக்கும்
அம்பறுத் தூணியுண்டே லாவியங்கத் தெவர்க்குமுண்டே.

பிரமாத்திரச் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வரமிகுவன் னியர்வணங்கா முடியரசர் வன்மைதனை
　　வரைய வேண்டில்
சிரமகுட மன்னவராய்ப் பற்பலதே யங்களினுந்
　　திகழ்வோர் தம்முள்
விரவலரைப் பொன்னிலத்து மித்திரரை யிந்நிலத்தும்
　　வீறி வாழ்வான்
பிரமசிரத் தாணிறுவும் பெற்றிமைகண் டாய்ந்தெவர்தாம்
　　பேசற் பாற்றே. 18

நாராயணாத்திரச் சிறப்பு.

காரியனாங் காதலவன் னியவீர ரடுசமரிற்
　　கனன்றே யுய்க்கும்
பேரியனா ராயணாத் திரத்தினுக்கிந் திராதிபிர
　　மாதி யோரும்

நேரியல வுட்குவரே யியாவரெதிர் வாழ்த்தியதை
நின்று தாழ்வோர்
பாரியர்மங் கலநாண்பன் ஞளுநிலை பெறவரம்பா
லிக்கு மம்மா. 19

பாசுபதாத்திரச் சிறப்பு.

கொச்சகம்.

உருத்திரவின் வயங்குதிங்க ளுதயனெதி ரொளிர்தருங்கோல்
உருத்திரனும் வயிரவரை யுறழ்தோளார் வன்னிமன்னர்
உருத்திரத மிவர்ந்திகலோ ருரஞ்சாய்ப்பத் தொடுக்குமழல்
உருத்திரவன் படைக்குமற்ற வும்பர்படை யொப்பாமோ. 20

அபிமந்திரித்தற் சிறப்பு.

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

அக்கரமொன் றக்கரமூன் றக்கரமைந் தக்கரமெட்
டாகி யாய
எக்கடவுண் மந்திரமு மெண்ணிஞுருச் செபித்துவினை
வெய்தி னேரும்
மிக்கதிது வெனவியப்ப விறல்வன்ய குலவரசர்
விடுங்கோல் சென்று
தக்கவபி மந்திரமாட் சியினமர்வென் றிறைவனிடஞ்
சார்த்த லாலே. 21

ஈாணிறங்குதற் சிறப்பு.

பூதலத்தோர்க் கிடரிபற்று மரக்கருடல் பிளந்துவெற்றிப்
புனைந்த வோலை
மீதலத்தோர்க் குணரவிடுத் தவர்பயந்தீர்த் தரக்கியர்கள்
வெரீஇத்தோ டோய்ந்த
காதலருக் கழுதாற்றிக் கழுத்திலகு மங்கலநாண்
கழித்த தற்பின்
தாதலர்தா ரணிவன்யர் தனிச்சிலைநாண் களித்திறங்கித
தயங்கு மாதோ. 22

வீரவாட் சிறப்பு.

கொச்சகம்.

விண்ணவர்க்கு விருந்தினராய் மேவியர மாதரின்பம்
மண்ணின்மரு வலர்மருவ வாழ்விக்கும் பண்ணுடர்
திண்ணமுறு வன்னிமன்னர் திருக்கரத்தி லேந்தியமர்
நண்ணும்வய வாண்மகிமை நாமெங்ங னவில்வதுவே. 23

வேலேந்திய காலாட்படைச் சிறப்பு.

செய்யகத்து வளநாடு தேர்ப்புலவர்க் கினிதளிப்பார்
மெய்யகத்து வன்னியர்செவ் வேள்பலவா முருக்கொளல்போல்
கையத்துவேலேந்து காலாளின் படையினன்றி
வையகத்து மருவுகலி மற்றொன்று லகலாவே. 24

யானைப்படைச் சிறப்பு.

ஓரானை முகத்தானை யுலகத்தோர் முன்னிறுத்திப்
பேரான கருமமெலாம் பிறழாது முற்றுகிற்பார்
காரான வுடலவுணர் கலங்குற முன் னிறுத்திவன்யர்
போரானைப் படையானே போர்வயங்கோ டலினன்றே. 25

குதிரைப்படைச் சிறப்பு.

பூவேறி நான்முகனும் புள்ளேறித் திருமாலும்
சேவேறிக் கண்ணுதலுஞ் செய்வதென்னே தீஞ்சுவைகொள்
பாவேறிப் புகழ்பெற்றுப் பாராளும் வனியர்தழல்
மாவேறிப் பகைவென்று மானிலங்காத் தருள்வாரே. 26

தேர்ச் சிறப்பு.

பார்விழாப் பெறக்காக்கும் பண்ணுடர் பதமலரில்
போர்விழாப் புரிவேந்தர் பொன்னவிர்மா முடிவணக்கி
ஆர்விழா திருப்பார்க ளமரர்மலர் மழைசொரியத்
தேர்விழா வுறவுலகக்கிற் றிருவிழாத் தினமென்றே. 27

இதுவுமது.

செங்கதிரோ னோராழித் தேரேறித் திகழ்வதுவும்
அங்கசன்மா ருதத்தேரூர்ந் தடலாண்மை செலுத்துவதும்

துங்கமனு நெறிபிழையாத் துகளறுவன் னியவீரர்
அங்கிரத மிவர்திறத்துக் கணுவளவு மிணையாமோ. 28

அகழின் சிறப்பு.

பேராழி செலுத்திவயம் பெறவணியர்க் கிடமாகிக்
கூராழிப் பானகரைக் குறைசொல்கம்பை நகருடுத்திட்
டோராழித் தேரிருபா லொதுங்கவய் ரெயிற்புடைசூழ்
சீராழி யாமகழின் சிறப்பெவரே யுரைப்பவரே, 29

அரண் சிறப்பு.

சரண்புகுந்தீ சனைச்சான்றோர் தம்முயிரைக் காப்பரெனும்
வரம்புளதங் கதுவியப்பின் மருவியதோர் வழக்கன்றால்
முரண்புகுதோட் செறுநர்வரின் மூதுலகோர் வன்னியர்தம்
அரண்புகுந்து தம்முயிர்காத் தமர்ந்திருப்ப ராதலினே. 30

கோடிச் சிறப்பு.

சுடர்க்கொடியை வனக்கொடியுந் துகளில்வெற்றிப் புலிக்கொடி
அடற்புவிமன் றினுந்தாமே யரசியற்றும் படிதாவக் [யும்
கடற்புவிபி னிரந்தரமுங் கருணைபுரி தாயேபோல்
இடர்பகையி லாதுவன்ய ரெவ்வுயிரும் வளர்ப்பாரே. 31

அரசாட்சி மண்டபச் சிறப்பு.

அண்டர்மலர் மழைசொரிய வந்தணர்பல் லாண்டிசைப்பத்
தண்டனிட்டுப் பொருந்தலருஞ் சபங்கூற வன்னிமன்னர்
கொண்டபசும் பொன்வேய்ந்து குலவுபல மணிகுயிற்றும்
மண்டபத்தில் வீற்றிருக்கை மண்டபம்பெற் றிடுபேறே. 32

சிங்காதனத்திருத்தற் சிறப்பு.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

தங்காத னன்பனிறை யென்ன மாதர்
சந்ததமுந் தொழுதெழுவார் சலியா தாகம்

தங்காத னனையநாட்பிற் சிறந்தே யாவுந்
தகுபுலியு மோர்துறையிற் தண்ணீர் மாந்தும்
சிங்காத னம்பசும்பொன் மணிதூ சாதி
தெளிவுறவே தியர்க்குதவும் வன்னி மன்னர்
சிங்காத னத்தின்மிசை யமர்ந்து நாளுந்
திகழரசு செயுங்கருணைச் செயலா லன்றே. 33

முடிதரித்தற் சிறப்பு.

கொச்சகம்.

தன்முடிமேற் புவிதாங்குந் தனியரவிற் றுயில்வோர்க்கும்
சொன்முடிவாம் பரமனுக்குந் தோன்றுமிளைப் பொழித்திடுவார்
பொன்முடிசென் னியிற்றாங்கிப் புகழ்வனிய வரசரொன்னார்
மூன்முடியக் குடிதழைய மூதுலகம் புரத்தலினே. 34

இதுவுமது.

தேவர்முடி திங்கண்முடி சேணாரு மிரவிமுடி
மூவர்முடி முனிவர்முடி மும்மையுல கினில்வாழ்வோர்
யாவர்முடி யும்விளங்கு மென்றுமொரு முடிவில்லாக்
கோவிறைவன் னியர்முடிமேற் குலவுமுடி விளங்கலினே. 35

புயகேயூர கிரீடச் சிறப்பு.

இயனடுநீண் டிருபுடைதாழ்ந் திடவமைத்த வணைமூன்றின்
அயன்முதன்மூவருந்தொழின்மூன்றாங்கியற்றவமர்ந்ததுபோல்
வயமுறுவன் னிபவரசர் வடவரைபோல் வீறியதிண்
புயமுடியு மணிமுடியும் பொருந்தியது புதுமைத்தே. 36

குடைச் சிறப்பு.

படையுடைய முடிவேந்தர் பணிந்திடுவோர் மனுநீதி
நடைவருணச் சிரமநெறி நழுவாது காத்தெவர்க்கும்
விடையவன்ற னருள்பெற்ற வீரவன்னி மன்னர்கொற்றக்
குடைநிழலைத் தந்துகலிக் கோடைதணித் திடுவாரே. 37

சேங்கோற் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வெங்கோப மதம்பொழியும் விண்ணவர்கோ னும்பனிகா
 வேழ முண்டோ
வைங்கோலஞ் சேர்கனகப் பஞ்சதரு வனையபா
 தபமற் றுண்டோ
இங்கோத வான்சுரபிக் கிணையுண்டோ வன்னிமன்ன
 ரெனுமேன் மக்கள்
செங்கோலுக் கெதிராங்கோல் செகதலத்திலொன் றுண்டோ
 செப்பு வீரே. 38

செங்கோல்வண்மைச் சிறப்பு.

கொச்சகம்.

வீரசம்பு முனிவேள்வி விளங்கவரு முடிவேந்தர்
சீர்மருவுங் கரத்தேந்து செங்கோலின் றிறத்தானே
நேரறுதீக் கடைகோலு நிறைகோலு நீடுலகில்
ஏரடரு முழுகோலு மிடரின்றி யிருப்பதுவே. 39

செங்கோல் நடத்தற் சிறப்பு.

சீராரும் வன்னிமன்னர் செங்கோன்மை செலுத்துதலால்
சோராது சுரர்க்கும்பூ சுரர்க்குமிகு சிறப்புமுண்டாம்
நீராரும் புவியின்மனு நெறிதவறு தென்பதன்றி
ஆராலும் பழுதுரைக்க லாமோசொல் வல்லீரே. 40

அறத்தினெறிச் சிறப்பு.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தாரேந்து புயவேந்தர் தழலிடைவந் தவதரித்தோர்
 தனுவான் மிக்க
சீரேந்து மறத்தினெறி திறம்பாது நிற்கின்ற
 செயலா லன்றே

காரேந்திச் சொரிமழையுங் கலைமறையும் வாணிபமு
மடவார் கற்பும்
ஏரேந்து மவர்வாழ்வு மிடரின்றி நிற்பதன்றி
யென்கொண் டம்மா, 41

ஆக்கிணுச்சக்கரச் சிறப்பு.
வேறு.

ஊழிக் கிறைதண் கடல்வீழ்ந்தா
னும்பர்க் கிறைபந் தரமானான்
கோழிக் கிறைதன் ரூதைவரை
குறுகி னனெஞ் சறநாணி
மேழிக் கிறைமூ விரண்டினென்று
மேவப் பெறுவன் வியர்செலுத்தும்
ஆழிக் கிறைநா டொறுமாறு
தகில முழுதுங் காத்தல்கண்டே. 42

தொழிற்நெறி பிறழாமைச் சிறப்பு.

கற்பத் தொழியா மறைபயிலுங்
கவின்மே விபவந் தணர்தொழிலும்
சிற்பத் தொழில்வை சியர்தொழிலுந்
தினமு முயர்முக் குலத்தோரைப்
பொற்பத் தொழுஞ்சூத் திரர்தொழிலும்
புகலெத் தொழிலு முறைபிறழ்ந்தே
அற்பத் தொழிலா காதரசா
ளது பண் ணுட்டார் தந்தொழிலே. 43

முத்திரைமோதிரச் சிறப்பு.
கொச்சகம்.

எத்திசைமன் னவராணு முத்திரிக்கு மீதன்றிப்
பத்திமையில் லார்க்கந்தப் பானுலகு முத்திரிக்கும்
சத்தியம்பொய் யாதுவைகிச் சகம்புரக்கும் வன்னியர்கைம்
முத்திரையா ழிக்குநிகர் மூநக்கீர் மொழிமீரே, 44

துட்டநிக்கிரகச் சிறப்பு,

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தீட்டார் தமையுஞ் சிவநிந்தை
செய்வோ ரையுஞ்செங் கோன்முறையோர்
பூட்டார் தமையும் பொய்யரையும்
போர்வெங் களத்துப் போந்துபுறம்
காட்டார் தமையுங் கள்வரையுங்
கலிதீர்ந் திடக்காட் டியவறத்தை
நாட்டார் தமையு நானிலத்தி
னோட்டார் நவில்பண் ணோட்டாரே. 45

வாயில்காத்தற் சிறப்பு.

கொச்சகம்.

கடிந்தாரைக் களவன்னியர் காப்பாளர் சமர்க்களத்தில
மடிந்தாலுஞ் சுவர்க்கமுண்டாம் வாயில்காத் தவரடியில்
படிந்தாலு மரசுண்டாம் பகர்வதெவன் பாரிடத்தில்
விடிந்தால்வேந் தன்வாயின் மேவாதார் யாருளரே. 46

தொழுதன்முதலிய சிறப்பு.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அணங்காற் றருவில் லேந்திமுறை
யரசாள் வன்னிச் சயதரரை
வணங்கார் யார்கை கூப்பார்யார்
வாரி சூழும் வையமிசை
இணங்கார் யார்நின் றேத்தார்யா
ரேவர் பணிசெய் யார்யார்நல்
மணஞ்சார் முற்றங் காத்திருந்து
வாழ்நாண் மகிழார் யார்யாரே. 47

செல்வாக்கின் சிறப்பு.

கொச்சகம்.

பாவவைசயு நாவலர்பாற் பத்திமிக வைத்ததுவும்
பூவவைசயு மணிமார்பர் புகழினுக்கோர் நிகரின்றால்

மாவசையாப் பெருஞ்செல்வர் மாதிரங்காக் கும்வனியர்
நாவசைய நிரந்தரமு நாடசையா திருந்திடுமோ. 48

புகழ்ச் சிறப்பு.

ஆந்துணையாம் வன்னியர்போ லார்துணைப்பட் டாதரிப்பார்
போந்தரிகள் வணங்குமிவர் புகழ்சிறிதோ யாம்புகழ்தற்
கேந்துகர மிரண்டினும்பொன் னில்க்கமறச் சொரியினுமிவ்
வேந்தர்புகழ்க் கிணைநாவால் வேறுபுகழ்க் கூறேமால். 49

இதுவுமது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வளமருவு மங்கையர்கோன் சொல்த்தகுபல்லவராயன்
மரபிற் றேன்றிக்
களமருவு கறையுடைய கண்ணுதல்கச் சியின்வாழே
காம்ப ரேசற்
குளமருவு மன்பினரா யொளிர்மகுட மணிப்பொற்றே
ருதவி மேனுள்
தளமருவு தாமரைபோன் முகவனியர் பண்டைத்தபுகழ்
சாற்றறப் பாற்றே. 50

மாசகற்றற் சிறப்பு.

வேறு.

மின்னு மிரவி தனிற்றேன்றும்
வேந்தர் குலத்தில் வருமாசும்
மன்னு மதியங் தனிற்றேன்று
மன்னர் குலத்தில் வருமாசும்
துன்னு திரைத்தண் கடலுலகிற்
றேலைக்குந் தூய்தாங் கனற்றேன்றும்
பன்னு புகழ்கொ ளரசர்களே
பார்க்கின் மாசு தீர்ந்தாரே. 51

பெருந்தன்மைச் சிறப்பு.

கலையான் மிக்கோ ருலகளிக்குங்
கருத்தான் மிக்கோர் கனகமணி
மலையான் மிக்கோர் நிலவுதுடை
வளத்தான் மிக்கோ ருரைமாறு
நிலையான் மிக்கோ ரினிதோங்கு
நெறியான் மிக்கோ ரிகல்வெல்லும்
சிலையான் மிக்கோர் வன்னிமன்னர்க்
கெவர்தா மிக்கோர் தெளிதரினே, 52

இதுவுமது.

கலி விருத்தம்.

ஆக்க முன்னிடி லுயரறத்தை யாக்குவர்
போக்க முன்னிடிற் பொருந்தாரைப் போக்குவர்
காக்க முன்னிடிற் கடனிலத்தைக் காப்பர்நல்
லூக்க முன்னிடு குணத்தோர்பண் ணுடரே. 53

இதயவண்மைச் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சமைய வளமுஞ் சிவனுமைமால்
தலத்தின் வளமுங் குலவளமும்
அமையு நிலத்தின் வளமுமுழ
வாளர் வளநல் லறவளமும்
தமையொப் பிலர்கற் புறுவளமுஞ்
சகலவுளமுந் தமிழ்வேந்தர்
இமையப் பொருப்பர் பண்ணுடை
ரிதய வளத்தின் றிறத்தானே, 54

இராஜசமுகச் சிறப்பு.

வானோர் வியக்குஞ் சமுகமுது
மறையோர் வாழ்த்துஞ் சமுகமலர்த்

தேனார்ந் திருக்குஞ் சமுகமன்னர்
திறைக ளளக்குஞ் சமுகம்விழி
மானார் நடிக்குஞ் சமுகமதி
வல்லோர் துதிக்குஞ் சமுகமொன்னார்
ஆனா திறைஞ்சு சமுகம்வன்னி
யரசர் சமுக மதுதானே. 55

பதியிருத்தற் சிறப்பு.

கொச்சகம்.

பண்ணுடர் தமதுபெரும் பதியிருப்ப தாலிமையோர்க்
கெண்ணார்ந்த சிறப்பிருக்கு மிம்பர்மனு முறையிருக்கும்
கண்ணமுத் தமிழிருக்குங் கற்றோர்க்குப் புகழிருக்கும்
விண்ணார்ந்த மழையிருக்கு மிடியிருக்க மாட்டாவே. 56

மன்னர்சூழ்தற் சிறப்பு.

பொன்னணையு மரதநம்போற் புகழணையும் பெருநிதிபோல்
மன்னணையு நெடும்படையோன் மலரணையு மளியினம்போல்
தன்னிகரா ரெனத்தழலிற் சகலகலை யுடனுதித்த
மன்னரையே மன்னரெலா மதித்தணைந்து வாழ்வாரே. 57

மொழிதவறாமைச் சிறப்பு. [யும்

விண்ணொளிர்வெங்கதிரொளியும்விதுவொளியும்விளக்கொளி
தண்ணொளிகான் மணியொளியுந் தகைசான்றவொளியாமோ
கண்ணொளியாயுறைவணியர்காத்தருள்பொய்யாவொளியே
மண்ணொளியாவொளியெனமாமறையொளியாவழுத்தலினே.

சாந்தமுதலியவற்றின் சிறப்பு.

சாந்தமிரட் சகத்தாலுந் தகைபெறுவை பவத்தாலும்
ஆர்ந்தபுய பலத்தாலு மழகமைந்த திறத்தாலும்
ஏந்துபுக ழரன்மாலிற் திரன்குகன்வே ளெனவன்னி
வேந்தர்சிறந் திருப்பதையிம் மேதினியே விளம்பிடுமால். 59

கொடைவளத்தின் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வையந் தழைப்ப மறைதழைப்ப
மறையோர் புரியு மகந்தழைப்பச்
செய்யு முனிவர் தவந்தழைப்பச்
செங்கோ றழைப்பச் சீர்தழைப்பப்
பெய்யு முகில்போற் றுங்கவன்யர்
கைம்மா றுகவா மற்பெறுவோர்
கையுந் தழைப்ப மெய்தழைப்பக்
கனகம் பொழிவார் காணீரே. 60

வள்ளற்றன்மைச் சிறப்பு.

கொச்சகம்.

புள்ளிபல வாயினும்புன் பூசைபுலி யாகாவே
வெள்ளிபல வாயினும்வான் வெண்மதியொன் றாகாவே
துள்ளல்பல வாயினுமோர் தூய்கருட னாகாவே
வள்ளல்பல ராயினுநல் வன்னியர்க்கொப் பாகாரே. 61

அடுத்தவர்க்குத் தாழ்வின்றெனற் சிறப்பு.

மேருவினைச் சார்ந்தவரை மிடியணுகு மோதேவ
தாருவினைச் சார்ந்தவரைத் தழற்பசிவந் தணுகிடுமோ
நேருரைசெ யாவணிய நிருபர்நெடுங் கழலிணையைச்
சாருமவர் தமையிழையுந் தாழ்வென்ப தணுகுறுமோ, 62

உமையருள் பெற்றோரெனற் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கலைமகடன் மைந்தரெனக் கலைஞானம் பெறுகையினாற்
கடல்சூழ் பூமித்
தலைமகடன் மைந்தரெனச் சகமுழுது மரசாளுந்
தன்மை யானீ

டலைமகடன் மைந்தரென வாக்கத்தாற் றழலிலவ
தரித்த றன்னுல்
மலைமகடன் மைந்தரென வரமளிக்கப் பெறுவனியர்
மகிமை யென்னே. 63

அஷ்ட ஐசுவரியச் சிறப்பு.

வேறு.

சாகரத் துலகி னிட்டைச் சம்புமா முனியி யற்றும்
யாகவுற் பவராம் வன்ய ரியாவையும் புரக்கு மாறு
வாகன மக்கள் சுற்ற மடிமைபொன் மணிநெல் லேகம்
ஆகர சாட்சி யோடெட் டயிச்சுவ ரியம்பெற் றூரே. 64

தசாங்கச் சிறப்பு.

கொச்சகம்.

வளங்குலவு பண்ணாடு மதக்களிறண் புலித்துவசம்
விளங்குமக மேருமனோ வேகரத மும்முரசு
களங்கறுகங் காநதிவெங் கனற்பரிவா டாமாலை
துளங்கவிற்பொற் சிலைபெற்றோர் துதிபெற்ற வன்னியரே.

அரசின் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நாடுபல வினுக்கரசு பண்ணாடு நகர்க்கரசு
நலஞ்சேர் கச்சி
நீடுவரை களுக்கரசு மாமேரு நதிக்கரசு
நிரைநீர்க் கங்கை
பீடுபெறு சிலைக்கரசவ் வுருத்திரன்வெஞ் சிலையகிலம்
பெரிது காக்கச்
சூடுமணி முடியரசுக் கரசுவன்னி யரசன்றிச்
சொலவே றுண்டோ. 66

வில்லின் புகழ்கூறுதற் சிறப்பு.

வேறு.

மேவரு மேரு வொத்த வீரபண் ணுடர் வில்லைத்
தேவரே கூறல் வேண்டுந் திசைமுக ளுதி யாய
மூவருங் கூறல் வேண்டு முனியகத் தியன னந்தன்
வாய்வளங் கூறல் வேண்டு மற்றெவர் கூறு வாரே. 67

பரிசுதரற் சிறப்பு.

வேறு.

அவிக்கா தரங்கூர் புனிதர்மகிழ்ந்
தருள்வன் னியரை யாம்புகழச்
செவிக்கா ரமுத மெனக்கேட்டுச்
சிந்தை யுவந்து சீர்தூக்கிப்
புவிக்கா யிரம்பொ னிறைனீக்கிப்
பொற்றண் டிகைபூ டணத்தோடு
கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான்
கருணா கரவன் னியன்காணே. 68

வாழ்த்துச் சிறப்பு.

ஆசிரிய விருத்தம்.

தனுமறை யெனுமிது வளர்கவே
தரணியி லறநனி விளைகவே
மனுநெறி வகையுயிர் பெருகவே
மணிமுத லியவள நிறைகவே
கன்முறை மையின்மழை பொழிகவே
களையற வுயர்பயிர் தழைகவே
இனமொடு சுரபிகள் பெருகவே
பிணியறு புவிவிரு தயர்கவே

இதுவுமது.

வேறு.

அவிசொரி வேள்வியைப் பாடினமே
　　யயோனிசம் பவர்தமை வாழ்த்தினமே
அவனிக் கிறைவரைப் பாடினமே
　　யறமெண் ணான்குற வாழ்த்தினமே
தவளக் கவிகையைப் பாடினமே
　　தழல்வெம் புரவியை வாழ்த்தினமே
தவமிகு வனியரைப் பாடினமே
　　தனிநெடுஞ் சிலையினை வாழ்த்தினமே. 70

இதுவுமது.

கொச்சகம்.

பூவாழி மறைவாழி புகல்செம்பொற் சிலைவாழி
பாவாழி சுடர்வாழி பகர்சம்பு முனிவாழி
மாவாழி யகளங்க வனியர்பெருந் தமர்வாழி
கோவாழி யிவர்தனிச்செங் கோல்வாழி வாழியவே, 71

செம்பொற்சிலை யெழுபது

முற்றிற்று.

நாலாயிர திவ்விய பிரபந்தத் திரட்டு.

இதில் ஆழ்வார்களின் சரித்திரமும், திருப்பாவை, திருப்பல்லாண்டு, திருமாலை, திருப்பள்ளியெழுச்சி கண்ணிநுண்சிறுத்தாம்பு, அமலனாதிபிரான், முதல்திருவந்தாதி, இரண்டாந்திருவந்தாதி, மூன்றாந்திருவந்தாதி, நான்முகன்திருவந்தாதி, திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம், திருச்சந்தவிருத்தம், திருவாய்மொழி முதலிய முக்கியமான பாசுரங்களைத் திரட்டி அச்சிட்டிருக்கிறது, இது பஜனை கோஷ்டிகளுக்கும் நாலாயிர பிரபந்த மனுஷ்டிப்போருக்கும் ஏனையோருக்கும் மிகவும் உபயோகமானது. விலை அணு 8.

சிவ விஷ்ணு க்ஷேத்திர விளக்கம்.

இந்த சிவ விஷ்ணு க்ஷேத்திர விளக்கமென்னும் புத்தகம் ஒவ்வொரு சைவ, வைஷ்ணவர்களிடத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இதில் பாடல்பெற்ற சிவஸ்தலங்கள், விஷ்ணுஸ்தலங்கள், வைப்புஸ்தலங்கள், புராணஸ்தலங்கள், புராதனஸ்தலங்கள், பிரபலஸ்தலங்கள் இவையாவும் இருக்கின்றன. அந்தந்த ஸ்தலங்களுக்கு போகும் இரயில்வே ஸ்டேஷன் மார்க்கம், அத்தலத்துக்கு சமீபத்திலிருக்கும் ஸ்தலம், அல்லது பிரபலகிராமம், அங்கங்குள்ள வசதிகள் யாவும் வெகுதெளிவாக, விஷ்ணம்பேட்டை பிரம்மஸ்ரீ ரா. சீனிவாச அய்யரவர்களால், அந்தந்த ஸ்தலங்களுக்கு நேரில் போய்தரிசித்தும், தன்னால்போக இயலாத ஸ்தலங்களின் மகத்துவங்களை தெரிந்தவர்களின் மூலமாய்கேட்டும், மிகுந்த பிரயாசையுடன் எழுதி முடிவு பெற்றது. இப்புத்தகம் ஒன்று கையில் இருக்குமானால் அத்தலங்களை நேறில்கண்டு தரிசித்த புண்ணியங் கிடைப்பதோடு, அத்தலங்களை தரிசித்தவாறே திருப்தியடைவார்கள் என்பது திண்ணம். இது 328-பக்கமுள்ளது

இதன் விலை ரூபா 1 4 0

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,
புரசை, சென்னை.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ் 200 பாடல்கள்

இத்திருப்புகழ் பலவாறு சிதைவுற்றிருப்பதை
திருத்தியும், சந்தங்களையும், துள்ளல்களையும் சரிவர
ஆறுபடைவீடுகளையும் வரிசைப்படுத்தி, அருணகிரி
மிகளின் திவ்விய சரித்திரமும், திருவுருவப் படமும்
வெகு அழகாக அச்சிட்டிருக்கிறது.

இதன் விலை அணா-6 ஷை 160-பாட்டு விலை அணா-2

நவதேவர் கீர்த்தனை.

இதில் விநாயகர், சிவன், விஷ்ணு, சுப்பிரமணியர், சரஸ்வதி, தேவி, தாசரதி, மாருதி, தர்மசாஸ்தா முதலிய கடவுளின்மீது கூறப்பட்டிருப்பதால், கீர்த்தனை படிப்போருக்கும் நாடகம் நடிக்கும் நடிகர்களுக்கும் சங்கீதம் பயில்வோருக்கும் ஓய்வு நேரங்களில் பாடல் பாடவேண்டுமென்ற ஆவலுடையவர்களுக்கும் இக்கீர்த்தனை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பெருமை வாசிப்போருக்கே தெரியவரும்.

இதன் விலை அணா—5

ஈட்டி யெழுபது

மூலமும் - உரையும்.

மகாகவியாகிய ஒட்டக்கூத்தர் செங்குந்தத் தலைவர்கள் மீது பாடிய இவ்வீட்டியெழுபதை முன்னிருந்த பிரதிகளை விட ஒருவாறு திருத்தியும், சில குறிப்புகளை எழுதியும் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6.

கிடைக்குமிடம்:— "மாறன்" அச்சுக்கூடம்,
புரசை, சென்னை,